## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 07 | இஸ்லாம் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................................

### பகுதி-I

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. வேதமும் ஸுஹுபும் கிடைக்கப்பெற்ற நபி,
   1. ஈஸா (அலை) 2. மூஸா(அலை) 3. இப்றாஹிம்(அலை) 4. இஸ்ஹாக்(அலை)

2. அல்குர்ஆன் இறக்கப்பட்ட இரவு,
   1. லைலதுல் கத்ர் 2. லைலதுன் ஸஈத் 3. லைலதுன் ஜீம்ஆ 4. லைலதுல் மிஹ்ராஜ்

3. மதீனா சென்ற பின்நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட பிரதான பணி,
   1. மஸ்ஜித் குபாவை கட்டியமை
   2. அன்சாரிகள் முஹாஜிர்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தியமை
   3. மஸ்ஜீதுன் நபியை நிர்மாணித்தமை
   4. பிற நாட்டு மன்னர்களுக்குதூது அனுப்பியமை

4. நபி நூஹ்(அலை) அவர்களின் கப்பல் தரை தட்டிய மலை,
   1. உஹுத் மலை 2. ஜூதி மலை 3. ஹிரா மலை 4. எவரெஸ்ட் மலை

5. முஸ்லிம்களுக்கு பங்கரம்மன என்ற கிராமத்தை பரிசளித்த மன்னன்,
   1. சேனரத் 2. வசபன் 3. இராஜசிங்கன் 4. பராக்கிரமபாகு

6. பிறர் வீட்டிற்கு செல்வதன் ஒழுங்கு,
   1. மணி அடித்தல் 2. ஸலாம் கூறுதல் 3. கதவை தட்டுதல் 4. எட்டிப் பார்த்தல்

7. ஜனாபத் என்ற பதத்தின் பொருள் யாது?
   1. சிறு தொடக்கு 2. மதிப்புகுரியவர் 3. மரணித்தல் 4. பெருந்தொடக்கு

8. குன் என்பதன் பொருள்,
   1. ஓதுவீராக 2. படைப்பீராக 3.ஆகுக. 4.அழிப்பீராக

9. உணவு காற்று, நீர், நெருப்பு என்பவற்றிற்கு பொறுப்பான மலக்கு,
   1. இஸ்ராபீல்(அலை) 2. அதீத்(அலை) 3. முன்கர்( அலை) 4. மீக்காயீல்(அலை)

10. திக்ரின் வகைகள் எத்தனை?
    1. 4 2. 2 3. 8 4. 6

11. நோன்பாளிகள் எந்த வாயில் மூலம் சுவனம் நுழைவார்கள்?
    1.பிர்தௌஸ் 2.நயீம் 3. ரையான் 4.பாபுஸ் ஸகாத்

12. அன்னை உம்மு ஸல்மா(ரழி) அவர்களின் இயற்பெயர்,
    1.ஹிந்த் 2.பாத்திமா 3.ஆயிஸ் 4.குப்ரா

13. முஸாபஹா என்பதன் பொருள் யாது?
    1.கட்டியணைத்தல் 2.ஆரத்தழுவுதல் 3. கைலாகு செய்தல் 4.வாசித்தல்


kalvi.lk

14. சுவன வாலிபர்களின் தலைவர்கள் யார்?
1.அபூபக்கர் - உமர் 2.இப்றாஹீம்-மூஸா 3.பிலால்-அலி 4.ஹஸன்-ஹுசன்

15. நபி (ஸல்) அவர்களினால் முதல் முதலில் அதான் கூற பணிக்கப்பட்ட ஸஹாபி யார்?
1.உஸ்மான் (ரழி) 2.பிலால் (ரழி) 3.அனஸ் (ரழி) 4.அபூஹுரைரா(ரழி)

16. அல் இஸ்ரா என்பது,
1.மதீனா பயணம் 2. நடுநிசிப் பயணம் 3.மக்காப் பயணம் 4.விண்ணுலகப் பயணம்

17. சாதாரண நஜீஸில் அடங்காதது,
1. மலம் 2. வாந்தி 3.நாயின் சீறுநீர் 4. இரத்தம்

18. ஆண்கள் அணிய அனுமதிக்கப்பட்டது,
1.பட்டாடை 2.வெள்ளி மோதிரம் 3.தங்கம் 4. சலங்கை

19. மறுமையில் நிழல் பெற்றுத் தரும் செயல்,
1.நல்ல தோழமை 2.பெற்றோரை பராமரித்தல் 3.சதகா 4.ஆசிரியர்களை மதித்தல்

20. நல்ல நண்பனுக்கு உதாரணம்,
1.கஸ்தூரி வியாபாரி 2.கொல்லன் 3. விவசாயி 4.ஆசிரியர்

(20× 1= 20புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

(ஜிப்ரில்(அலை) /மடமை /தாஸூஆ/ இறுதிப்பத்து/ முகஸ்துதி / ஸீன்னத்தான/ றைஹான் பூக்கள் /ஹீர்ரன் முஹஜ்ஜலீன் /மணிக்கட்டு /ஷைத்தான்)

1. குளிப்பானது பர்ழான் குளிப்பு.................................என வகைப்படுத்தப்படும்.

2. வுழுவின் காரணமாக உம்மத்தினர் மறுமையில்...............................ஆக எழுப்பப்படுவர்.

3. மலக்குமாரின் தலைவர்...............................ஆகும்.

4. வருடாந்தம் ஆஷுறா .....................................நோன்புகள் நோற்பது சுன்னத்தாகும்.

5. ஸூறா பகறா ஓதப்படும் வீட்டில்..............................நுழையமாட்டான்.

6. பெண்கள் முகம்............................தவிர்ந்த ஏனைய பகுதியை மறைக்க வேண்டும்.

7. பிறருக்கு காண்பிப்பதற்காக தொழுவது..................................கருதப்படும்.

8. ஹஸன் ஹீஸைன்(ரழி)அவர்கள் நபியவர்களால் ......................................என கூறப்பட்டார்கள்.

9. லைத்துல் கத்ர் இரவு ரம்ழான்.......................இரவில் கணிக்கப்படும்.

10. ஜாஹிலிய்யா..........................எனப் பொருள்படும்.

(10 ×1 =10புள்ளிகள்)

**03. சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**

1. சுவனத்திற்கு திறவுகோல் ஸகாத் ஆகும். ( )
2. வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும். ( )
3. எமது நல்லமல்கள் மறுமை நாளில் சிபாரிசு செய்யும். ( )
4. மலக்குகள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்வார்கள். ( )
5. வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைப்பது நல்ல பழக்கமாகும். ( )
6. அன்ஸாரிகள் என்போர் மதீனா வாசிகள். ( )
7. முதன் முதலில் அருளப்பட்ட சூரா சூரதுல் பலக் ஆகும். ( )
8. மக்காவிலிருந்து மதீனாவுக்கு சென்ற பயணம் மிஹ்ராஜ் எனப்படும். ( )
9. அல்குர்ஆன் வாழ்வின் சில துறைக்கு மாத்திரமே வழிகாட்டுகிறது. ( )
10. அல்குர்ஆனுக்கு விளக்க உரையாக சுன்னா உள்ளது. ( )

(10 ×1 =10புள்ளிகள்)

## பகுதி-II

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அன்னை உம்முஸல்மா(ரழி) அவர்களின் தந்தையின் பெயர் என்ன?
2. “யத்ரிப்” என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட நகர் இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
3. ஸஹாபாக்கள் எனப்படுவோர் யார்?
4. திக்ரின் இரு வகைகளையும் குறிப்பிடுக.
5. ஹதீஸ் என்றால் என்ன?
6. அஹதுன் என்பதன் பொருள் யாது?
7. தற்போது நடைபெறும் ஹிஜ்ரி ஆண்டு என்ன?,
8. ஈஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் எது?
9. ஹுஸைன்(ரழி) அவர்கள் எப்போது பிறந்தார்கள்?
10. ஈமான் என்பதன் கருத்து யாது?

(10× 2 =20புள்ளிகள்)

**02. முதலாம் வினா உட்பட எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1. நஜிஸீன் வகைகள் யாது?

2. சாதாரண நஜீஸுக்கு 3 உதாரணங்கள் தருக.

3. நெய்யில் நஜீஸ்விழுந்தால் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

(2 + 3+ 5 =10புள்ளிகள்)



kalvi.lk

**02.** 1. பிறர் வீட்டிற்கு செல்லும்போது நாம்  கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் 02 குறிப்பிடுக.

2. பிறர் பொருளை அனுமதியின்றி பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் 03 தருக.

3. பொது இடங்களில் கண்டெடுக்கப்பட்ட  பொருளை என்ன செய்ய வேண்டும்?

(2+ 3+ 5 =10புள்ளிகள்)

**03.** 1. நாம் காணும் சொத்துக்களை 2 வகையாகப் பிரிக்கலாம். அவை எவை?

2 பொதுச் சொத்துக்கள் 03 தருக.

3. பொதுச் சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படும் சந்தர்ப்பம்05 தருக.

(2+ 3+ 5 =10புள்ளிகள்)

**04**. 1. முஹாஜிர் அன்ஸார் எனப்படுவோர் யார்?

2. இஸ்லாம் கூறும்யுத்த தர்மங்கள் 03 தருக.

3. மதீனா சமூகத்தின் சிறப்புப் பண்புகள் 05தருக.

(2+ 3+ 5 =10புள்ளிகள்)

**05**. 1. நற்பண்புகள் 02 தருக.

2. உம்மஹாத்துல் மு.ஃ.மின்கள் 03 பெயரைக் குறிப்பிடுக.

3. பிறருக்குச் செய்யும் உதவிகள் 03 தருக.

(2+ 3+ 5 =10புள்ளிகள்)

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM** — 850/= Monthly

**ENGLISH MEDIUM** — 1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page